# 2021- 2022 NEWSPAPER CUTTINGS

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கொரோனா தடுப்பூசி முகாம்




► விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வளாகத்தில் கொரோனா தடுப்பூசி முகாம் நடந்தது.

விழுப்புரம், செப். 5: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வளாகத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்றது. விழுப்புரம் மாவட்ட நகராட்சி சுகாதார நிலைய அலுவலர் பாலசுப்ரமணியம் தலைமை தாங்கினார். கல்லூரியின் செயலாளர் செந்தில்குமார் தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வு, தடுப்பூசி செலுத்திக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்தும் பொது இடங்களில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்தும் விளக்கினார்.

முகாமில் கல்லூரியின் பதிவாளர் முனைவர் சவுந்தரராஜன் தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் மகத்துவம் குறித்தும், கொரோனா பேரிடர் காலத்தில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்தும் மாணவிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், கல்லூரியின் முதல்வர் முனைவர் பிருந்தா தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் நோக்கம் குறித்தும், முகக்கவசம் அணிதலின் அவசியம் குறித்தும், மாணவிகள் வகுப்பறையில் சமூக இடைவெளியுடன் அமர்வது குறித்தும் அறிவுறுத்தினார். இம்முகாமில் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவிகள் 370க்கும் மேற்பட்டோர் பங்கேற்று தடுப்பூசி செலுத்தி பயனடைந்தனர்.

தினகரன் - 05.09.21




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்றபோது எடுத்த படம்.

தினத்தந்தி - 03.09.2021



விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# மாணவிகளின் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா

விழுப்புரம், செப்.27–


விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இணையவழியில் மாணவிகள் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா நடைபெற்றது. விழாவிற்கு இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகர் கோபிநாத், இணையவழியில் பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், பெண் கல்வியின் முக்கியத்துவம், பெண்ணின் முதல் சுதந்திரம் கல்வி, பெண் வெற்றி ஒரு தலைமுறையின் வெற்றி, பெண்ணுக்கு சுய சிந்தனை அவசியம், ஒரு பெண்ணின் கல்வி மற்றொரு பெண்ணுக்கு ஊன்றுகோளாய் அமையும், பெண் நினைத்ததை செய்ய கல்வி மிக அவசியம், பெண்ணுக்கு அழகு முக்கியமல்ல, அறிவுதான் முக்கியம் என்றார்.

விழாவில் இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் பதிவாளர் சவுந்தர்ராஜன், கல்லூரி முதல்வர் பிருந்தா, துணை முதல்வர் செல்வி மற்றும் கல்லூரி புல முதன்மையர், ஆராய்ச்சி புல முதன்மையர், பேராசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்துகொண்டனர். முடிவில் மாணவர் புல முதன்மையர் ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

தினத்தந்தி - 27.09.2021

விழுப்புரம் இ.எஸ். கல்லூரியில்

# முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா




விழுப்புரம், அக்.9–

விழுப்புரம் இ.எஸ். கலை அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் நிறுவனர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். கல்லூரியின் தலைவர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். முதல்வர் சண்முகராஜ் வரவேற்றார். இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் பதிவாளர் சவுந்தர்ராஜன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக புதுச்சேரி அன்னை தெரசா பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன பதிவாளர் கோபால் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் ஏற்படும் வகையில் சிறப்புரையாற்றினார்.

விழாவில் முதலாமாண்டு மாணவ- மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். முடிவில் ஆங்கிலத்துறையின் தலைவர் அர்ஜுணன் நன்றி கூறினார்.

தினத்தந்தி - 09.10.2021

# மகளிர் கல்லூரியில் பேரவை துவக்க விழா



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை துவக்க விழா நடந்தது.

**விழுப்புரம், அக். 11–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை துவக்க விழா நடந்தது.

இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழும பதிவாளர் சவுந்தரராஜன் தலைமை தாங்கினார். மாணவியர் பேரவைத் தலைவி சாய்காயத்ரி ஆண்டு அறிக்கையையும், ஜெயஸ்ரீ உடற்கல்வி ஆண்டு அறிக்கையையும் வாசித்தனர். கல்லூரி முதல்வர் பிருந்தா முன்னிலை வகித்தார்.

சென்னை, ஐ.ஏ.எஸ்., அகாடமி பயிற்சி நிறுவன இயக்குனர் தனசேகரன், மாணவிகள் நேரத்தை பயன்படுத்தும் விதம், ஆல்பா செயல்முறை பயிற்சி மூலம் இலக்கை அடைதல் குறித்து சிறப்புரையாற்றினார்.

இதையடுத்து, போட்டித் தேர்வு தொடர்பான மாணவிகள் வினாக்களுக்கு, இயக்குனர் தனசேகரன் பதில் கூறியதுடன், பரிசும் வழங்கினார். துணைப் பதிவாளர், துணை முதல்வர், கல்விப்புல முதன்மையர் உட்பட மாணவியர்கள் பங்கேற்றனர்.

பேரவை துணைத் தலைவி ரகமத் நிஷா நன்றி கூறினார்.

தினமலர் - 11.10.21

# இ.எஸ்., செவிலியர் கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கம்




■ விழுப்புரம் இ.எஸ்., செவிலியர் கல்லூரியில், தேசிய அளவில் சமூக சுகாதார செவிலியரின் பங்கு குறித்த கருத்தரங்கம் நடந்தது.

**விழுப்புரம், அக். 16–**

விழுப்புரம் இ.எஸ்., செவிலியர் கல்லூரியில், தேசிய அளவிலான சமூக சுகாதார செவிலியரின் பங்கு குறித்த கருத்தரங்கம் நடந்தது.

இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழுமம் செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். துணை முதல்வர் பேராசிரியர் கார்த்தி வரவேற்றார். முதல்வர் பொற்செல்வி முன்னிலை வகித்தார். திருச்சி, அஸ்ட்ரோ கிளப் செயலாளர் மனோகர், தேசம் புத்தகத்தை நிர்வாகிகளுக்கு வழங்கினார்.

ஜெர்மனி, ஹைடெல் பெர்க் இன்ஸ்டிடியூட் ஆப் குளோபல் ஹெல்த் பார்த்தசாரதி, செவிலிய மாணவ, மாணவிகளுக்கு, சமூக ஆரோக்கியத்தில் செவிலியரின் பங்கு குறித்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து, சமூகத்தில் வெண்புள்ளி பற்றிய விழிப்புணர்வு செய்வதில் செவிலிய மாணவர்களின் பங்கு குறித்து அமைப்பு செயலாளர் உமாபதி கூறியதோடு, வெண்புள்ளி பாதிப்பு, தீர்வுகளுக்கான புத்தகத்தை வெளியிட்டு, மாணவர்களுக்கு வழங்கினார். பதிவாளர் சவுந்தரராஜன் வாழ்த்திப் பேசினார்.

துணை பேராசிரியை குமுதவல்லி நன்றி கூறினார்.

தினமலர் - 16.10.2021

# மகளிர் கல்லூரியில் காணொலி கருத்தரங்கு

**விழுப்புரம், அக். 29–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் காணொலி கருத்தரங்கம் நடந்தது.

தமிழாய்வு துறை சார்பில் நடந்த கருத்தரங்கில், திருச்சி தேசிய கல்லூரி உதவி பேராசிரியர் கருத்தான், 'இலக்கியங்கள் காட்டும் உவமையியல்' தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கில், இலக்கியங்கள் இன்று நம் வாழ்வியலோடு சேர்ந்து பயணிப்பதாகவும், வாழ்வின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் இலக்கியங்களின் உவமை இருப்பதாகவும், நவீன வாழ்வில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் பற்றியும் கூறப்பட்டது. 50 மாணவிகள் பங்கேற்று பயனடைந்தனர். மாணவிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

உதவி பேராசிரியை பிரியதர்ஷினி நன்றி கூறினார்.



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் காணொலி கருத்தரங்கம் நடந்தது.

தினமலர் - 29.10.2021

# இ.எஸ்., பாலிடெக்னிக்கில் வேலைவாய்ப்பு நிகழ்ச்சி

**விழுப்புரம், நவ. 1–** விழுப்புரம் இ.எஸ்., பாலிடெக்னிக் கல்லூரியில், வேலைவாய்ப்பு மற்றும் திறனறிவு நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். லுக்காஸ் டி.வி.எஸ்., மனிதள மேம்பாட்டுத் துறை துணை மேலாளர் சித்தா யோகா மன்னன், மாணவர்கள் வாழ்வில் மேம்படவும் மற்றும் தொழிற்சாலைகளில் வேலைவாயப்பு பெறுதல் பற்றி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியை, துறைத் தலைவர் புஷ்கலா அம்பாள் தொகுத்து வழங்கினார். ஏற்பாடுகளை, துறை தலைவர்கள் ரவி, கஜேந்திரன், அபிதாபேகம், நிவேதா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் செய்திருந்தனர். துணை முதல்வர் ரமேஷ் நன்றி கூறினார்.




■ விழுப்புரம் இ.எஸ்., பாலிடெக்னிக் கல்லூரியில், வேலைவாய்ப்பு மற்றும் திறனறிவு நிகழ்ச்சி நடந்தது.

தினமலர் 01-11-2021

## தீபாவளி பரிசு வழங்கும் விழா

விழுப்புரம், நவ. 4–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு தீபாவளி பரிசு வழங்கும் விழா நடந்தது.

முதல்வர் பிருந்தா தலைமை தாங்கி, ஓட்டுநர், துப்புரவு, உணவகம் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு தீபாவளி பரிசாக புத்தாடைகளை வழங்கினார். கணினி அறிவியல் துறைத் தலைவர் மனோகரி வரவேற்றார்.

தமிழாய்வு துறை உதவி பேராசிரியர் மணிகண்ணன் நோக்கவுரையாற்றினார். ஆங்கில துறை தலைவர் சோபியா நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு தீபாவளி பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

தினமலர் 04-11-2021

## மகளிர் கல்லூரியில் தீபாவளி நிகழ்ச்சி

விழுப்புரம், நவ. 5–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தீபாவளி விழா கொண்டாடப்பட்டது.

விழாவில், இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழுமம் செயலாளர் செந்தில்குமார், இணைச் செயலாளர் நிஷா செந்தில்குமார், முதல்வர் பிருந்தா முன்னிலையில், கலை நிகழ்ச்சிகள் நடந்தது. தொடர்ந்து வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

ஏற்பாடுகளை மாணவியர் புலமுதன்மையர் ராஜேஸ்வரி செய்திருந்தார். தேர்வு கட்டுப்பாட்டாளர், புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் பங்கேற்றனர்.

தினமலர் 05-11-2021

# மகளிர் கல்லூரியில் காணொலி கருத்தரங்கு

விழுப்புரம், நவ. 7–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உளவியல் துறை சார்பில் காணொலி கருத்தரங்கம் நடந்தது.

சென்னை மறுவாழ்வு மைய ஆலோசகர் யாமினி ராஜகோபால் பங்கேற்று, 'நேர்மறை உளவியல் கலை' தலைப்பில் இணையவழியாக சிறப்புரையாற்றினார்.

இதில், மானுடவாழ்வின் நோக்கம், அர்த்தம், மனநெகிழ்ச்சி, நன்றியுணர்வு, மாணவிகள் மேம்பாட்டிற்கான ஊன்றுதல் பற்றி விளக்கமளித்தார்.

மாணவிகளுக்கு கல்வி சார் நோக்கு நிலையில், நேர்மறை அணுகுமுறைகளை உருவாக்க குறிப்புகளை தெரிவித்தார்.

கருத்தரங்கில் 170 மாணவிகள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். முன்னதாக, உதவி பேராசிரியர் முகமது அறிமுக உரையாற்றினார். துறை தலைவர் பரணி நன்றி கூறினார்.



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உளவியல் துறை சார்பில் காணொலி கருத்தரங்கம் நடந்தது.

தினமலர் - 07-11-2021

# மகளிர் கல்லூரியில் பயோஹெலிக்ஸ் துவக்க விழா



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், உயிர்வேதியியல் துறை சார்பில், 'பயோஹெலிக்ஸ் அமைப்பு துவக்க விழா' நடந்தது.

விழுப்புரம், நவ. 11–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், உயிர்வேதியியல் துறை சார்பில், 'பயோஹெலிக்ஸ் அமைப்பு துவக்க விழா' நடந்தது.

இ.எஸ்., கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் சண்முகராஜு 'உயிர்வேதியியல் துறையில் தொழில் வாய்ப்புகள்' தலைப்பில், உயர்கல்வி பயில்வதற்கான வழிமுறைகள், இந்தியாவின் உயிரியல் தொழில்கள், மருந்து நிறுவனங்களின் இருப்பிடம், வாழ்வில் வெல்ல விடாமுயற்சி பற்றி கூறினார். இளங்கலை மாணவி ஸ்ரீநிவேதிதா வரவேற்றார். வேதியியல் துறை தலைவர் ஸ்ரீதேவி வாழ்த்திப் பேசினார்.

விழாவில், 132 மாணவிகள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். பயோஹெலிக்ஸ் அமைப்பு ஆண்டறிக்கையை ஆர்ணிகா வாசித்தார். முதுகலை மாணவி கவிச்சந்திரபிரியா நன்றி கூறினார்.

தினமலர் – 11/11/21

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி

# முதலாம் ஆண்டு தொடக்க விழா




விழுப்புரம், டிச.2–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது. இதற்கு கல்லூரியின் தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கி குத்துவிளக்கேற்றி முதலாம் ஆண்டு வகுப்புகளை தொடங்கி வைத்து கல்வி தரத்தின் முக்கியத்துவம் மற்றும் மாணவ ஆசிரியர் மதிப்பு பற்றி விளக்கி கூறினார்.

விழாவில் கல்லூரி முதல்வர் முருகன் மற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர். முடிவில் உதவி பேராசிரியர் ஜோதி நன்றி கூறினார்.

02-12-21 தினத்தந்தி



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'கணித இன்டகரா 10' பேரவை துவக்க விழா நடந்தது.

# மகளிர் கல்லூரியில் பேரவை துவக்க விழா

**விழுப்புரம், நவ. 18–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கணித இன்டகரா 10 பேரவை துவக்க விழா நடந்தது.

முதுகலை மற்றும் கணிதவியல் ஆராய்ச்சி துறை சார்பில் நடந்த விழாவிற்கு, முதல்வர் பிருந்தா தலைமை தாங்கினார். துணை முதல்வர் செல்வி வரவேற்றார்.

பேரவை ஆண்டறிக்கையை ஹரிணி வாசித்தார். டி.எம்.ஐ., பொறியியல் கல்லூரி இணை பேராசிரியர் அம்புரோஸ் பிரபு, 'சமீபத்திய போக்குகளில் சிக்கலான பகுப்பாய்வு' தலைப்பில் சிறப்புரையாற்றினார். 225 மாணவிகள், துறை பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

ம்மாள் கல்வியியல் கல்லூரி

தொடக்க விழா

தினமலர் – 18/11/21

# மகளிர் கல்லூரியில் மாணவ பிரசார நிகழ்ச்சி

**விழுப்புரம், டிச. 10–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பணி வாய்ப்பு புலம் சார்பில் 'ஹையர் ரேங்கர் மாணவர் பிரசாரம்' நிகழ்ச்சி நடந்தது.

கணினி அறிவியல் மற்றும் பி.சி.ஏ., பயிலும் 3ம் ஆண்டு மாணவிகளுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் வேலை வாய்ப்பு அதிகாரி முத்துராஜா தலைமை தாங்கினார். புதுச்சேரி தனியார் நிறுவன உறுப்பினர் வரதராஜன் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில், ஹையர் ரேங்கர் பயன்பாடுகள் மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. தொடர்ந்து, மாணவிகளோடு கலந்துரையாடி, பயனுள்ள தகவல்கள் கூறப்பட்டது. 95 இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் பங்கேற்றனர்.



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பணி வாய்ப்பு புலம் சார்பில் 'ஹையர் ரேங்கர் மாணவர் பிரசாரம்' நிகழ்ச்சி நடந்தது.

தினமலர் 10-12-2021

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்



# பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

விழுப்புரம், டிச.12-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியும், தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியும் இணைந்து விழுப்புரத்தில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை நடத்தின. பேரணிக்கு கல்லூரி முதல்வர்கள் பிருந்தா, முருகன் ஆகியோர் தலைமை தாங்கினர். கல்லூரியின் துணைப்பதிவாளர் தியாகராஜன், கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார். விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வளாகத்தில் இருந்து புறப்பட்ட இப்பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகம் அருகில் முடிவடைந்தது. இப்பேரணியில் 300-க்கும் மேற்பட்ட மாணவ- மாணவிகள் கலந்துகொண்டு பிளாஸ்டிக்கை ஒழிப்பது தொடர்பான கோஷங்களை எழுப்பியவாறு விளம்பர பதாகைகளை ஏந்திச்சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் கல்லூரி துணை முதல்வர், பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி - 12.12.2021

---

**விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியில்**

# கற்றல், கற்பித்தல் கருவிகள் தயாரித்தல் குறித்த கருத்தரங்கம்



விழுப்புரம், டிச.15-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியில் கற்றல், கற்பித்தல் கருவிகள் தயாரித்தல் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு கல்லூரியின் தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் முருகன் அனைவரையும் வரவேற்றார். இணைப்பதிவாளர் தியாகராஜன் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்கின் முதல் பகுதியில் தமிழ்நாடு வானியல் அறிவியல் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் மனோகர் கலந்துகொண்டு எளிய அறிவியல் பரிசோதனைகள் மூலம் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்கும் முறையை செய்துகாட்டல் முறையின் மூலம் மாணவிகளையும் செய்ய வைத்து விளக்கி கூறினார்.

அடுத்த பகுதியாக வெண்புள்ளி நோய் பற்றிய விழிப்புணர்வை மாணவிகளிடையே உமாபதி விளக்கி கூறினார். அதனை தொடர்ந்து ரத்தினகுமார், வள்ளி ஆகியோர் 'கணக்கும் இனிக்கும்' என்ற தலைப்பில் கணித பாடத்தை எளிய பொருட்களை கொண்டு மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் செய்து காட்டி அவர்களையும் செய்ய வைத்து விளக்கி கூறினார்கள். மேலும் மொழி பாடத்தையும் எளிய பொருட்களை கொண்டு கற்பிக்கும் முறையை செய்து காட்டி விளக்கி கூறினார்கள். கருத்தரங்கின் முடிவில் கல்லூரியின் துணை முதல்வர் சுந்தரலிங்கம் நன்றி கூறினார்.

தினத்தந்தி - 15-12-2021




விழுப்புரம், இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழுமம் சார்பில் கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகளில் வென்றவர்களுக்கு நடந்த பரிசளிப்பு விழாவில் செயலாளர் செந்தில்குமார் பேசினார்.

# கல்லூரிகளுக்கிடையே போட்டி: பரிசளிப்பு விழா

**விழுப்புரம், டிச. 5–**

விழுப்புரம் இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழுமம் சார்பில் 'கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகளில் வென்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நடந்தது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு, செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். முதல்வர் பிருந்தா வரவேற்றார். இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழுமம் துணை பதிவாளர் தியாகராஜன் முன்னிலை வகித்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழக, தமிழாய்வுத் துறை, இணை பேராசிரியர் கருணாநிதி, மாணவ, மாணவிகளின் முன்னேற்றம் குறித்து பேசினார். முதல்வர்கள் சக்திவேல், பொற்செல்வி, சண்முகராஜ், முருகன் வாழ்த்திப் பேசினர்.

கல்லூரிகளுக்கு இடையே நடந்த பல்வேறு போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு, பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

சுழல்கோப்பை மற்றும் அதிக பதக்கங்களை பெற்ற தெய்வானை மகளிர் கல்லூரிக்கும், தனி நபருக்கான சுழல் கோப்பை இ.எஸ்., நர்சிங் கல்லூரி மாணவி விக்னேஷ்வரிக்கும் வழங்கப்பட்டது. மாணவிகள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். துணை முதல்வர் செல்வி நன்றி கூறினார்.

தினமலர் - 05-12-2021

# மகளிர் கல்விய

# மாணவிகளுக்

**விழுப்புரம், டிச. 16–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்வியியல் கல்லூரியில் 'கற்றல் கற்பித்தல் கருவிகள் தயாரித்தல்' என்ற தலைப்பில் ஒரு நாள் பயிலரங்கம் நடந்தது.

தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். முதல்வர் முருகன் வரவேற்றார். இணைப் பதிவாளர் தியாகராஜன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு வானியல் அறிவியல் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் மனோகர், அறிவியல் பரிசோதனை

# மகளிர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'நானோ பொருட்களின் உருவாக்கம் மற்றும் பண்பு கூறுகள்' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

**விழுப்புரம், டிச. 17–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'நானோ பொருட்களின் உருவாக்கம் மற்றும் பண்பு கூறுகள்' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

இயற்பியல் துறை சார்பில் நடந்த கருத்தரங்கிற்கு, முதல்வர் பிருந்தா தலைமை தாங்கினார். பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் தேசிய நானோ புனைதல் மைய தொழில்நுட்ப மேலாளர் வரதராஜ பெருமாள், 'நானோ பொருட்களின் உருவாக்கம் மற்றும் பண்பு கூறுகள்' குறித்து விளக்கினார்.

நிகழ்ச்சியில், கல்லூரி முதல்வர், இயற்பியல் துறை தலைவர் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர் 17-12-2021

# மகளிர் கல்வியியல் கல்லூரி மாணவிகளுக்கு பயிலரங்கம்


**விழுப்புரம், டிச. 16–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்வியியல் கல்லூரியில் 'கற்றல் கற்பித்தல் கருவிகள் தயாரித்தல்' என்ற தலைப்பில் ஒரு நாள் பயிலரங்கம் நடந்தது.

தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். முதல்வர் முருகன் வரவேற்றார். இணைப் பதிவாளர் தியாகராஜன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு வானியல் அறிவியல் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் மனோகர், அறிவியல் பரிசோதனைகள் மூலம் பாடம் கற்பிக்கும் முறையை செய்து காட்டல் மூலம் விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, வெண்புள்ளி நோய் பற்றி உமாபதி பேசினார். பின், ரத்தினகுமார், வள்ளி ஆகியோர் 'கணக்கும் இனிக்கும்' தலைப்பில் கணிதபாடத்தை எளிய பொருட்கள் கொண்டு மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் செய்து காட்டி விளக்கம் அளித்தனர். துணை முதல்வர் சுந்தரலிங்கம் நன்றி கூறினார்.

02-12-21




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்வி ... ாள் கல்லூரியில் 'கற்றல் கற்பித்தல் கருவிகள் தயாரித்தல்' என்ற தலைப்பில் ... ாள் பயிலரங்கம் நடந்தது.

தினமலர் 16-12-2021

# தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் அமைச்சர் பணி நியமன ஆணை வழங்கல்




■ விழுப்புரத்தில், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் நடந்த தனியார் நிறுவன வேலை வாய்ப்பு முகாமை அமைச்சர் மஸ்தான் துவக்கி வைத்து பேசினார். அருகில் எம்.பி.,க்கள் ரவிக்குமார், விஷ்ணுபிரசாத், கலெக்டர் மோகன்.

**விழுப்புரம், நவ. 28–**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் விழுப்புரத்தில் நடந்தது.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த முகாமிற்கு, கலெக்டர் மோகன் தலைமை தாங்கினார்.


எம்.பி.,க்கள் ரவிக்குமார், விஷ்ணுபிரசாத் முன்னிலை வகித்தனர்.

அமைச்சர் மஸ்தான் முகாமைத் துவக்கி வைத்து, பணி நியமன ஆணையை வழங்கிப் பேசினார்.

முகாமில், 123க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் பங்கேற்று 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலி பணியிடங்களுக்கான தேர்வு நடந்தது. இதில் 5,500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர். 988 பேர் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெயச்சந்திரன், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குனர் சங்கர், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) காஞ்சனா, மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மைய உதவி இயக்குனர் பாலமுருகன், இ.எஸ்., கல்வி தாளாளர் சாமிக்கண்ணு, மகளிர் கல்லூரி செயலாளர் செந்தில்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர் 28-11-2021



*நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களை படத்தில் காணலாம்.*

# விழுப்புரம் இ. எஸ் கல்லூரியில் கணிதத்துறை விழா

விழுப்புரம்,அக்.31–

விழுப்புரம் இ.எஸ். கல்லூரியில் கணிதத்துறைவிழாநடந்தது. கணிதத்துறையை சேர்ந்த ஜோர்ஜ்பெர்னாண்டஸ் வரவேற்றார். முதல்வர் முனைவர் சண்முகராஜூ தலைமை தாங்கி பேசினார். சுபாஷினி கணிதம் சிறப்பு விருந்தினர் பற்றிய அறிமுகத்தை அளித்தார். துறைத் தலைவர் எஸ்.கோவிந்தன் வாழ்த்துரை வழங்கினார். தருமபுரி பெரியார் பல்கலைக்கழக முதுநிலை விரிவாக்க மைய விரிவுரையாளர்முனைவர் .பி. சதீஷ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு "லேடெக்ஸ் அறிமுகம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். எளிய முறையில் சமன்பாடுகளை தட்டச்சு செய்யும் அறிவை வளப்படுத்துவதற்கு கணிதத் துறையில் பயன்படுத்தப்படும் சமீபத்திய மென்பொருளை எவ்வாறு அணுகுவது என்பதை மாணவர்கள் அவரிடமிருந்து கற்றுக்கொண்டனர். பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர், பேராசிரியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இறுதியாக கனிமொழி நன்றி கூறினார்.

மாலை மலர் 31-10-2021

# இ.எஸ்., கல்லூரியில் சிறப்பு சொற்பொழிவு

**விழுப்புரம், டிச. 17–**

விழுப்புரம் இ.எஸ்., கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 'வரலாற்று நோக்கில் தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாடு' தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடந்தது.

வரலாற்று துறை சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு, முதல்வர் சண்முகராஜூ தலைமை தாங்கினார். மாணவி ராகினி வரவேற்றார். வரலாற்று துறை தலைவர் தாண்டவமூர்த்தி முன்னிலை வகித்தார். திருவண்ணாமலை அரசு கலைக்கல்லூரி வரலாற்று துறை தலைவர் தனிஸ்லாஸ், ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம வாய்ப்புகள், சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

பெண்கள் தங்களுடைய படைப்பாற்றல், ஆளுமைத் திறன்கள், தலைமைத்துவம் ஆகியவற்றை மேலும் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என பேசினார்.

பேராசிரியர்கள் தேவராஜன், நிலவேந்தன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

தினமலர் 17-12-21

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்




விழுப்புரம், டிச.24–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முதுகலை மற்றும் கணிதவியல் ஆய்வுத்துறை சார்பில் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழும துணைப்பதிவாளர் தியாகராஜன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் பிருந்தா வரவேற்றார். சிறப்பு விருந்தினராக பெங்களூரு கிறிஸ்ட் பல்கலைக்கழகத்தின் கணிதவியல் துறை பேராசிரியர் ஜோசப் வர்கீஸ் குரிதரா கலந்துகொண்டு பள்ளிக்கல்விக்கும், கல்லூரி கல்விக்குமான வேறுபாடு குறித்து கலந்துரையாடி கருத்துகளை பகிர்ந்துகொண்டார். இந்த கருத்தரங்கில் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் இருந்து 302 மாணவிகள் கலந்துகொண்டு 40 ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சிறந்த ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்த மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இதில் கல்லூரி துணை முதல்வர் செல்வி, ஆய்வுப்புல முதன்மையர் கலைமதி உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் கணிதவியல் துறைத்தலைவர் தனலட்சுமி நன்றி கூறினார்.

தினத்தந்தி – 24 – 12 – 2021

# மகளிர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

விழுப்புரம், டிச. 26–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

கணிதவியல் ஆய்வு துறை சார்பில் நடந்த கருத்தரங்கிற்கு, இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழுமம் துணை பதிவாளர் தியாகராஜன் தலைமை தாங்கினார். முதல்வர் பிருந்தா வரவேற்றார். துணை முதல்வர் செல்வி அறிமுக உரையாற்றினார்.

பெங்களூரு, கிறிஸ்ட் பல்கலைக்கழகம், கணிதவியல் துறை பேராசிரியர் ஜோசப் வர்கீஸ் குரிதாரா, பள்ளி கல்வி, கல்லூரி கல்விக்குமான வேறுபாடு குறித்து பங்கேற்பாளர்களிடம் கலந்துரையாடினார்.

பின், அவர், 'நியூ டெவலப்மென்ட் இன் டாமினேஷன் கிராப்ஸ்' என்ற தலைப்பில் பாதை, சுழற்சி, குறியாக்க வரைபடம், வரைபடத்தில் சக்கரத்தின் பயன்பாடு குறித்து பேசினார்.


கருத்தரங்கில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் இருந்து 302 பேர் பங்கேற்றனர். 40 பேர் ஆய்வு கட்டுரையை சமர்பித்தனர். கருத்தரங்கில் பங்கேற்ற ஆய்வாளர்கள், மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆய்வுப்புல முதன்மையர் கலைமதி நோக்கவுரையாற்றினார்.

கணிதவியல் துறை தலைவர் தனலட்சுமி நன்றி கூறினார்.

தினமலர் 26-12-2021

## விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# பன்னாட்டு காணொலி கருத்தரங்கம்



விழுப்புரம், டிச.30-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆங்கிலத் துறையின் சார்பில் பன்னாட்டு காணொலி கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில் சிறப்பு சொற்பொழிவாளராக எழுத்தாளர் மிக்சிகன் கலந்துகொண்டு எழுத்துத்திறன் மற்றும் சுய அன்பின் கலை என்ற தலைப்பில் உரையாற்றினார். அவரை தொடர்ந்து எழுத்தாளர் வால்டன் கலந்துகொண்டு இலக்கியத்தின் முக்கியத்துவத்தை பற்றியும், எழுத்தாளர் சந்தியா, சுய அன்பின் கலைகள் என்ற தலைப்பிலும் விளக்கி பேசினர்.

இந்த கருத்தரங்கில் சிறப்பாக செயல்பட்ட மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. முடிவில் ஆங்கிலத்துறை தலைவர் சோபியா நன்றி கூறினார்.

தினத்தந்தி 30-12-2021

# வர்த்தக கண்காட்சி மாணவர்கள் பார்வை

**விழுப்புரம், டிச. 31–** விழுப்புரம் இ.எஸ்., பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் தொழில் முனைவோர் வர்த்தக கண்காட்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கல்லூரி தாளாளர் செந்தில்குமார் வழிகாட்டுதலின் பேரில், சென்ற மாணவர்கள், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் அதிநவீன தொழில்நுட்பத்தோடு கூடிய இயந்திரங்கள்,அதன்செயல்பாடுகள் குறித்து அறிந்து கொண்டனர்.

மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதையடுத்து, பிர்லா கோளரங்கம், அறிவியல் ஆய்வரங்கம் சென்று விண்வெளியில் ஏற்படும் மாற்றம், ஆராய்ச்சி குறித்தும், 3டி தொழில்நுட்பம் குறிந்தும் தெரிந்து கொண்டனர்.

தினமலர் - 31-12-2021



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இயற்கணித கட்டமைப்புகள் மற்றும் சில ஒருங்கிணைந்த அமைப்புகளின் தீர்வுகள் தலைப்பில் இணையவழி காணொலி கருத்தரங்கம் நடந்தது.

# மகளிர் கல்லூரியில் காணொலி கருத்தரங்கு

**விழுப்புரம், ஜன. 1–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'இயற்கணித கட்டமைப்புகள் மற்றும் சில ஒருங்கிணைந்த அமைப்புகளின் தீர்வுகள்' தலைப்பில் இணையவழி காணொலி கருத்தரங்கம் நடந்தது.

முதுகலை மற்றும் கணிதவியல் ஆய்வுத்துறை சார்பில் நடந்த கருத்தரங்கிற்கு, காரைக்குடி காமராஜர் இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி கணிதத்துறை உதவி பேராசிரியர் இளங்கோவன், நேரில் அல்லாத வேறுபாடு சமன்பாடு, அதன் தீர்வுகள் குறித்து விளக்கமளித்தார்.

கருத்தரங்கில் கணிதத்துறை மாணவர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். உதவி பேராசிரியை கவிதா வாழ்த்திப் பேசினார். உதவி பேராசிரியை ஆனந்தி நன்றி கூறினார்.

தினமலர் 1-01-2022

# THEIVANAI AMMAL COLLEGE FOR WOMEN

**(AUTONOMOUS) - VILLUPURAM, TAMIL NADU.**

(Permanently Affiliated to the Thiruvalluvar University – Vellore, Now to Annamalai University - Chidambaram, Tamil Nadu) (Accredited by NAAC (3rd Cycle) with CGPA of 3.2/4 at 'A' Grade), (Recognized under 2(f) and 12(B) by UGC) DST-FIST Sponsored College under 'College as a whole' Scheme

Villupuram – 605401, Tamil Nadu. Phone:- 04146 - 259674, Website:- www.tacw.in | Email:- info@tacw.in

## *Proudly announces the extension of Autonomous status*

**We are extremely happy to announce that the University Grants Commission (UGC) has extended our Autonomous status which we have been enjoying for the past 11 years. In our 32 years of existence as an Institution we have been serving for the Empowerment of Women, and NAAC has duly granted us 'A' grade (3rd Cycle), thus placing us as one among the 249 Higher Educational Institutions in India.**

AUTONOMOUS

UGC CERTIFIED

**TO OUR CREDIT WE HAVE SO FAR CONDUCTED 56 NATIONAL / INTERNATIONAL SEMINARS & WORKSHOPS | 194 INVITED LECTURES & WEBINARS | 16 FUNDED RESEARCH PROJECTS | 48 FACULTY DEVELOPMENT PROGRAMMES | 3948 MOOCs / FOSS COURSES AND PUBLISHED 419 FACULTY PUBLICATIONS | 409 STUDENTS' PUBLICATIONS.**

மக்கள் குரல் 02-01-2022

# மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு

விழுப்புரம், ஜன. 5–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முதுகலை மற்றும் கணிதவியல் ஆய்வு துறையின் இணையவழி காணொலி கருத்தரங்கம் நடந்தது.

'அறிவுசார் சொத்துரிமைகள் பற்றிய விழிப்புணர்வு' தலைப்பில் நடந்த கருத்தரங்கில், திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி கணினி அறிவியல் துறை இணை பேராசிரியை காயத்ரி சிறப்புரையாற்றினார். உதவி பேராசிரியை கோமதி வரவேற்றார்.

கருத்தரங்கில், அறிவுசார் சொத்துரிமைகள், காப்புரிமை, வடிவமைப்பு, வர்த்தக முத்திரைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. கணிதத்துறை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். உதவி பேராசிரியை கவிதா நன்றி கூறினார்.

தினமலர் 05-01-2022

# நுாறு சதவீதம் தடுப்பூசி: மகளிர் கல்லூரி சாதனை




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கொரோனா தடுப்பூசி முகாம் நடந்தது.


விழுப்புரம், ஜன. 9–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி நுாறு சதவீதம் கொரோனா தடுப்பூசி செலுத்தி கொண்ட கல்லூரியானது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கொரோனா தடுப்பூசி செலுத்திய மாணவிகளை மட்டும் வளாகத்திற்கு வர அனுமதி வழங்கியது. தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு வளாகத்தில் இடைவிடாத தடுப்பூசி முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால், கல்லூரியில் மாணவிகள், பேராசிரியர்கள், அலுவலர்கள் என அனைவரும் கடந்த 3ம் தேதி முதல் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர். இதனால் நுாறு சதவீதம் கொரோனா தடுப்பூசி செலுத்தி கொண்ட கல்லூரியாக மாறியுள்ளது.

மேலும், 13 வயது முதல் 18 வயதிற்குட்பட்டோருக்கான தடுப்பூசியும் கல்லூரி வளாகத்தில் செலுத்தப்படுகிறது.

தினமலர் – 09-01-2022




தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.

## விழுப்புரத்தில்

# 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி செலுத்திய தெய்வானை அம்மாள் கல்லூரிமாணவிகள்

விழுப்புரம்,ஜன.9–

மாணவியர்களின் கல்வியிலும் சுகாதாரத்திலும் எப்போதும் தனிக்கவனத்துடனும் விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் (தன்னாட்சி) கல்லூரி செயல் பட்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகான காலங்களில் அரசின் வழிகாட்டுதலின் படியும் பன்னாட்டு சுகாதார நிறுவனங்களின் நெறிமுறைகளின் படியும் கூடுதல் விழிப்புணர்வுடனும் இந்தகல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**கொரோனா தடுப்பூசி**

கொரோனா பெருந்தொற்றை எதிர்கொள்ள தடுப்பூசியே முதன்மையான ஆயுதம் என்கிற அரசின் கொள்கையைப் பின்பற்றி, தடுப்பூசி செலுத்திக்கொண்ட மாணவர்களை மட்டுமே கல்லூரி வளாகத்தில் அனுமதித்தது.

தடுப்பூசிசெலுத்திக்கொள்ளாத மாணவர் களுக்காக, கல்லூரி வளாகத்திலேயே இடைவிடாத தடுப்பூசி முகாம்களை 2 நாட்கள் நடத்தியது. இதில் 551 பேர் கொரோனா தடுப்பூசி போட்டு கொண்டனர்.

மேலும் கல்லூரி வளாகத்தில் இத்தகைய வயதுடைய மாணவியர்களுக்கும் தடுப்பூசி செலுத்தி 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திக் கொண்ட பயனர்களை (பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள்) உள்ளிடக்கிய கல்லூரியாக மாறியிருக்கிறது. கொரோனா பெருந்தொற்று மாணவியர்களின் கல்வியிலும்எதிர்காலத்திலும் எவ்வித சுணக்கத்தையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி விடக் கூடாது என்கிற நோக்கிலேயே கல்லூரி நிர்வாகம் இவ்வித முன் னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

மாலை மலர் 09-01-2022

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர்வேதியியல் தேசியக் கருத்தரங்கம்




விழுப்புரம், ஜன. 11–

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர்வேதியியல் துறை தேசியக்கருத்தரங்கம் நடைபெற்றது.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர்வேதியியல் ஆய்வுத்துறையின் சார்பாக *"IPR ON BIOPROSPECTING & BIOPIRACY CURRENT CHALLENGES"* என்ற தலைப்பில் தேசியக்கருத்தரங்கம் இறைவணக்கம் மற்றும் கல்லூரிப்பாடல் இசைக்க துவங்கப்பட்டது. இத்தேசியக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கர்நாடகா மாநிலத்தின் மைசூர் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்பத்தின் இணைப் பேராசிரியர் என்.கீதா மற்றும் விழுப்புரம் இ.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் வி. சண்முகராஜு கலந்துகொண்டு உரையாற்றினார். தெய்வானை அம்மாள் கல்லூரி முதல்வர் எம். பிருந்தா தலைமை உரையாற்றினார்.

முன்னதாக, வரவேற்புரை மற்றும் சிறப்பு விருந்தினர் அறிமுகவுரையினை உயிர் வேதியியல் துறைத் தலைவர் பி. ஸ்ரீதேவி வழங்கினார். உயிர்வேதியில் துறை இணைப்பேராசிரியர் ஆய்வுப்புல முதன்மையர் ஜெ.கலைமதி தொடக்கவுரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினர் என்.கீதா பேசுகையில், இந்தியா நாட்டுப்புற பொருட்களிலிருந்து மருந்துகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், அழகுசாதனப் பொருட்கள் தயாரிப்பதில் பாரம்பரிய அறிவுக்கு பெயர் பெற்றது. பூர்வீக மக்களுக்கு நன்கு தெரிந்த மஞ்சள், வேம்பு மற்றும் ஃபிலாந்தஸ் அமரஸ் ஆகியவற்றின் பண்புகளை அவர் சுட்டிக்காட்டினார். ஆனால், ஏற்றுக்கொள்ள முடியாத இந்தப் பொருட்களுக்கு மற்ற நாடுகள் காப்புரிமையை நாடுகின்றன. பாரம்பரியமாக, பாக்டீரியாவால் உற்பத்தி செய்யப்படும் நாவல் கலவைகள், சாத்தியமான உற்பத்தியாளர்களை தனிமைப்படுத்துதல் மற்றும் பல்வேறு உயிரியல் ஆய்வுகளில் அவற்றின் சாறுகளை திரையிடுதல் ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கமான பயோபிராஸ்பெக்டிங் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட தேடல் தாவரங்கள், நுண்ணுயிரிகள் மற்றும் விலங்குகள் உள்ளிட்ட உயிர் வளங்களிலிருந்து பெறப்பட்ட தயாரிப்புகளை உருவாக்கியது. பொருட்களுக்கான மூலக்கூறு, மரபணு மற்றும் இனங்கள்நிலை பன்முகத்தன்மை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது ஆகியன பற்றி எடுத்துரைத்தார்.

இத்தேசிய கருத்தரங்கில் இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்துறை துறைகளைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்கேற்று பயனடைந்தனர். சிறந்த கட்டுரை வாய்மொழியாகத் தேர்வு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

உயிர் வேதியியல் துறையைச் சார்ந்த உதவிப்பேராசிரியர் எஸ்.ரேவதி நன்றியுரையாற்றினார்.

மக்கள் குரல்
11-01-2022

### 100 சதவிதம் கொரோனா தடுப்பூசி

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரிக்கு கலெக்டர் பாராட்டு



விழுப்புரம், ஜன.13–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகான காலங்களில் அரசின் வழிகாட்டுதலின்படி கல்லூரி வளாகத்தில் 5 தடுப்பூசி முகாம்களை நடத்தி 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திக் கொண்ட மாணவிகள், பேராசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கல்லூரியாக மாறியிருக்கிறது.

இதற்கான அறிக்கையை விழுப்புரம் மாவட்ட கலெக்[illegible]மோகனிடம் கல்லூரியின் [illegible]வர் பிருந்தா, துணை [illegible]வர் செல்வி மற்றும் மாணவியர் புல முதன்மையர் பேராசிரியர் ராஜேஸ்வரி ஆகியோர் வழங்கினர். அந்த கல்லூரி நிர்வாகத்தினருக்கு கலெக்டர் பாராட்டு தெரிவித்தார்.

தினத்தந்தி
13-01-2022

மக்கள் குரல் 13-01-2022



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகான காலங்களில் அரசின் வழிகாட்டுதலின்படி கல்லூரி வளாகத்தில் 5 தடுப்பூசி முகாம்களை நடத்தி 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திக்கொண்ட மாணவிகள், பேராசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கல்லூரியாக மாறியிருக்கிறது. இதற்கான அறிக்கையை விழுப்புரம் மாவட்ட கலெக்டர் மோகனிடம் கல்லூரியின் முதல்வர் பிருந்தா, துணை முதல்வர் செல்வி மற்றும் புல முதன்மையர் ராஜேஸ்வரி ஆகியோர் வழங்கினர். கலெக்டர், கல்லூரி நிர்வாகத்தினருக்கு பாராட்டு தெரிவித்தார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 5 தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. 100 சதவீத மாணவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டனர். மாவட்ட கலெக்டர் மோகனிடம் கல்லூரி முதல்வர் பிருந்தா அறிக்கை சமர்பித்த போது எடுத்தபடம்

## 100 சதவீதம் தடுப்பூசி

# விழுப்புரம் மகளிர் கல்லூரிக்கு ஆட்சியர் பாராட்டு!

விழுப்புரம், ஜன.13

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகான காலங்களில் அரசின் வழிகாட்டுதலின்படி கல்லூரி வளாகத்தில் 5 தடுப்பூசி முகாம்களை நடத்தி 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திக்கொண்ட மாணவிகள், பேராசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோரைஉள்ளடக்கியகல்லூரியாக மாறியிருக்கிறது.

இதற்கான அறிக்கையை விழுப்புரம்மாவட்டகலெக்டர் மோகனிடம் கல்லூரியின் முதல்வர் பிருந்தா, துணை முதல்வர் செல்வி மற்றும் மாணவியர் புல முதன்மையர் பேராசிரியர் ராஜேஸ்வரி ஆகியோர் வழங்கினர். அந்த கல்லூரி நிர்வாகத்தினருக்கு கலெக்டர் பாராட்டு தெரிவித்தார்.

மாலை முரசு 13-01-2022